

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 21ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் சனிக்கிழமை**

**அதிகாரம் : மக்கட்பேறு - குறள் எண் : 61**

**குறள்**

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

**குறள் விளக்கம்**

அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை.

பழமொழி ( Proverb )

***A sound mind in a sound body***

**உடல் வலுவுற்றால் உள்ளமும் வலுவுறும்.**

பொன்மொழி

வெற்றி என்னும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஒரே ஆயுதம் தன்னம்பிக்கை

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. மின்சாரத்தின் தந்தை என அழைக்கப்படுவர்? மைக்கேல் பாரடே
2. இரத்த ஓட்டத்தை கண்டுபிடித்தவர்? வில்லியம் ஹார்வி

## தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Come and write it on the black board. வந்து கரும்பலகையில் அதை எழுதுங்கள்

Get into groups of four. நான்கு குழுக்களாக இருங்கள்



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- ஈரான் தேசிய மரம் நடுதினம்
- இலங்கையில் அவசரகாலச் சட்டம் அமலுக்கு வந்தது(1964)
- ஐரோப்பாவின் முதல் விமானமான குலோஸ்டர் மெட்டர் பறக்க விடப்பட்டது(1943)
- பிரிட்டன் பர்மா மீது போர் தொடுத்தது(1824)

### இன்றைய செய்திகள்

- நகர்புறத் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் நேற்று பதவியேற்றுக்கொண்டனர்.
- உக்ரைன் - ரஷ்யா இடையே நடைபெறும் போர் தீவிரமடைந்துள்ளது.
- 100 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் களமிரங்கி விராட் கோலி சாதனை.
- தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகளில் 11 பெண் மேயர்கள் பதவியேற்று சாதனை.
- தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு உட்பட 5 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றுக்கு கூடுதல் பேரிடர் நிதியுதவியாக 1,682.11 கோடி ரூபாயை ஒதுக்க மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையிலான உயர்நிலைக் குழு வியாழக் கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரேசில் நாட்டில் வரலாறு காணாத கனமழையால் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 117 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.
- கொரானா தடுப்புசி முகாம் இன்று மீண்டும் துவங்கியுள்ளது.
- நமது பள்ளியில் நடைபெற்ற வாய்பாடு திருவிழா நேற்றுடன் நிறைவு பெற்றது. போடிநாயக்கனூர் வட்டாரக் கல்வி அலுவலர் வாய்பாடு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.
- இன்று எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழகம் முழுவதும் NMMS தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வினை நமது பள்ளியிலிருந்து 12 மாணவ, மாணவிகள் எழுதுகின்றனர்.